A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 90 / 2021</u>**

திரு. மா.வேதராஜசேகரன்,
த/பெ. மாணிக்கம்,
5795, மேலரதவீதி,
காளையார்கோவில்,
சிவகங்கை மாவட்டம் – 630 551.

………மேல்முறையீட்டாளர்
(திரு. மா.வேதராஜசேகரன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/பகிர்மானம் /சிவகங்கை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கலெக்டர் வளாகம், சிவகங்கை – 630 562.

2. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம் /காளையார்கோவில்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், காளையார்கோவில் – 630 551.

3. உதவி பொறியாளர்/ பகிர்மானம் /காளையார்கோவில்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், காளையார்கோவில் – 630 551.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு A.K. முருகையன், செயற்பொறியாளர்/பகிர்மானம் /சிவகங்கை
திரு. S. அன்புநாதன், உதவி செயற்பொறியாளர்/பகிர்மானம்/காளையார்கோவில்
திரு.K. திருசெல்வம், உதவி பொறியாளர்/பகிர்மானம்/காளையார்கோவில்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 07-12-2021</u>**

**<u>கேட்புரை நாள்: 10-02-2022</u>**

**<u>ஆணை நாள்: 18-03-2022</u>**

07.12.2021 அன்று பெறப்பட்ட திரு. மா.வேதராஜசேகரன், த/பெ. மாணிக்கம், 5795, மேலரதவீதி, காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் – 630 551 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 90/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 10.02.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தை புல எண் 21/5Bயில் இருந்து 60/1க்கு மாற்றம் செய்து இலவச மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 புல எண் 21/5B என்ற இடத்தில் அமைந்துள்ள கிணற்றுக்கு விவசாய இலவச மின் இணைப்பு வேண்டி 2002–இல் விண்ணப்பித்ததாகவும், பிறகு இதே முன்னுரிமைக்கு 2007இல் புல எண் மாற்றம் கேட்டு செயற்பொளியாளர்/பகிர்மானம்/ சிவகங்கை அவர்களுக்கு விண்ணப்பித்தாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு சிவகங்கை செயற்பொறியாளர்/பகிர்மானம் அவர்களிடமிருந்து அறிவிப்பு கடிதம் கிடைக்கபெற்றதாகவும், அனைத்து ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின் தனது விண்ணப்பம் ஏற்க இயலாது என செயற்பொறியாளர்/பகிர்மானம்/ சிவகங்கை அவர்கள் தெரிவித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம், சிவகங்கை மின் பகிர்மான வட்டத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சிவகங்கை மின்பகிர்மான வட்டம் 18.09.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

சிவகங்கை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.09.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"<u>முடிவு</u>:

*வழக்கெழு வினாவின் தீர்வு:*

*1. மனுதாரர் தந்தை பெயரிலிருந்து தனது பெயருக்கு பெயர் மாற்றம் வேண்டி 09.05.2007ல் விண்ணப்பம் பதிவு செய்யும் போது அம்மனுதாரருக்கு தான் ஏற்கனவே இதே புல எண் 21/5பி–ல் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்தது நன்றாக தெரிந்திருந்தும் இதே மனுதாரர் எதிர்மனுதாரரிடம் எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை.*

*2. மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி தனது தந்தை சின்னப்பன் (எ) மாணிக்கம் அவர்கள் புல எண்.21/5பி என்ற வட்ட கிணற்றுக்கு விண்ணப்ப பதிவு எண் 540/31.12.1990ல் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தனது தந்தை பெயருக்கு கிடைக்கப்பெற்ற முன்னுரிமையை தனது பெயருக்கு பெயர் மாற்றம் 16.05.2007ல் செய்த பின்னர் புல எண்21/5பில் மனுதாரர் விவசாய மின் இணைப்பு பெற்றுள்ளார்.*

*3. மனுதாரர் இம்மன்றத்தில் சமர்ப்பித்த ஆவணங்களிலிருந்து "என்னுடைய விவசாய இடத்திற்கு, புதிய மின்இணைப்புக்கோரி 05.02.2002 தேதியில் விண்ணப்பித்து முறைப்படி பதிவு செய்துள்ளேன். மேற்கண்ட பதிவில் சர்வே எண் 60/1 என்ற இடத்திற்கு பதிலாக 21/5பி என்று தவறுதலாக பதிவு செய்துவிட்டேன். தாங்கள் எனது விண்ணபத்திலும் மேலும் மற்ற எல்லா பதிவேடுகளிலும் 60/1 என்ற சர்வே எண் இடத்திலுள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான பதிவை சரி செய்யவும் தொடர் முன்னுரிமை விடுபடாமல் இருக்க வேண்டி" 21.05.2007ல் எதிர்மனுதாராகிய செயற்பொறியாளர்/பகிர்மானம்/சிவகங்கை அவர்களிடத்தில் விண்ணப்பித்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.*

*4. மனுதாரர் இம்மன்றத்தில் சமர்ப்பித்த ஆவணங்களிலிருந்து "எனது தந்தையார் திரு ரா.சின்னப்பனாகிய மாணிக்கம் அவர்கள், கொடிப்பாடு கடம்பூரணி குரூப் புல எண்.21/5பி இடத்தில் உள்ள வட்ட கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து 540/31.12.1990 என்ற எண்ணில் பதிவு செய்துள்ளார்கள். தற்சமயம் விவசாய முன்னுரிமை வந்த நேரத்தில் அவர்கள் உயிருடன் இல்லை. ஆதலால் மின் இணைப்பு தயார் நிலை பதிவு செய்ய வேண்டி வந்த கடிதம் தங்களது அலுவலகத்திற்கு திரும்பு வந்துவிட்டது. சிறிது காலம் கடந்து கேள்விப்பட்ட அவருடைய வாரிசான நான், பதிவு செய்ய முற்பட்டேன். தேவையான ஆவணங்களையும், கடிதங்களையும் தயார் செய்தேன். இதற்குள் தாங்களின் உத்தரவுப்படி உள்ள 90 நாட்கள் முடிவடைந்து*

*விட்டது. தயவு செய்து தாங்கள் எனக்கு செப்டம்பர் 2007 முடிய கால நீட்டிப்பு வழங்கிட வேண்டி 31.05.2007ல் மனுதாரர் எதிர்மனதாரர்களாகிய செயற்பொறிளாயர்/பகிர்மானம்/சிவகங்கை அவர்களிடத்தில் விண்ணப்பித்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.*

*5. மனுதாரர் 21.05.2007 கடிதத்தில் கொடுக்கப்பட்ட கோரிக்கையின்மீது எதிர்மனுதாரர்கள் எந்தவித நடவடிக்கை எடுக்காதது மிகவும் வருத்தமளிக்கிறது. மேலும் அதிகாரிகள் அனைவரும் தங்கள் கடமையில் தவறியுள்ளீர்கள்.*

*6. தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் Lr. No.SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc/D.986/aa, Dt. 22.07.2011 அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின்இணைப்பு தான் இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு ஒரு மின்இணைப்பிற்கு மேல் வழங்காமல் இருப்பதற்காக விண்ணபதாரரிடம் வேறு விண்ணப்பம் எதுவும் மின் இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும், மின்இணைப்பு எதுவும் விண்ணபதாரரின் பெயரில் மேற்கண்ட கிணற்றில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என்று அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் ஒரு உறுதிப்பத்திரம் விண்ணபதாரர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*7. எதிர்மனுதாரர்கள் விவசாய விண்ணப்பம் பதிவு செய்யும் பொழுது விண்ணபதாரர்களிடத்தில் உறுதி மற்றும் சம்மதக் கடிதம் பெறப்படுகிறது. இக்கடிதத்தில் பதிவு செய்யப்படும் புல எண்ணில் எந்த வித மின் இணைப்பு இல்லை என்றும், இதற்கு முன் இந்த சர்வே எண்ணில் எந்தவித விவசாய விண்ணப்பம் வேண்டி பதிவு செய்யவில்லை என்றும், மேலும் தெரியவரும் பட்சத்தில் என்னுடைய விண்ணபத்தினை ரத்து செய்ய சம்மதம் தெரிவிக்கிறேன் என்றும் கடிதம் விண்ணபதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் வாரிய விதிமுறைகளின்படி ஒரு புல எண்ணில் அமைந்துள்ள ஒரு கிணற்றிற்கு ஒரு உரிமைதாரருக்கு ஒரு விவசாய மின் இணைப்பு மட்டுமே வழங்கப்படும். மேலும் 22.07.2020 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் இதற்கு முன்பு ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழே சர்வே எண் 21/5Bல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு பெற்றிருந்தால் இவ்வறிவிப்பு பொறுந்தாது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்களின் வாதுரையை இம்மன்றம் ஏற்கிறது. எனவே மனுதாரரின் மேற்படி கோரிக்கையினை ஏற்க இயலாது என்று இம்மன்றம் தீர்வு செய்கிறது.*

*மேற்கண்ட முடிவுடன் இம்மன்றம் மனு எண் 05/2021 இறுதி செய்கிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 10.02.2022 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. மா.வேதராஜசேகரன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு A.K. முருகையன், செயற்பொறியாளர்/பகிர்மானம் /சிவகங்கை, திரு. S. அன்புநாதன், உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ காளையார்கோவில் மற்றும் திரு.K. திருசெல்வம், உதவி பொறியாளர்/ பகிர்மானம்/காளையார்கோவில், சிவகங்கை மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் 05.02.2002–இல் முடுக்கூரணி கிராமம், கொடிக்காடு கடம்பூரணி குரூப்பில் 21/5B என்ற இடத்தில் அமைந்த கிணற்றுக்கு விவசாய இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து பதிவு செய்ததாக தெரிவித்துள்ளார்.

5.2 பிறகு இதே முன்னுரிமைக்கு 2007இல் புல எண் மாற்றம் கேட்டு (கொடிக்காடு கடம்பூரணி குரூப் 21/5Bயில் இருந்து 60/1க்கு) சிவகங்கை செயற்பொறியாளர்/பகிர்மானம் அவர்களுக்கு விண்ணப்பித்ததாகவும், புல எண் மாற்றம் கேட்ட போது வாங்கப்பட்ட வருவாய் துறை சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், புல எண் மாற்றம் செய்து தரப்படும் என நம்பியிருந்த நிலையில் 20.07.2020–இல் விவசாய மின்சாரம் கொடுப்பதற்கான அறிவிப்புக் கடிதம் சிவகங்கை செயற்பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்டதாகவும், அவ்வறிவிப்புக்கடிதத்தில் புல எண் 60/1 மாற்றம் செய்யாமல் 21/5B என இருந்தது. உடனடியாக செயற்பொறியாளர்/சிவகங்கை அவர்களுக்கு இப்போதாவது புல எண் மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்க ஆவண செய்யக் கேட்டதற்கிணங்க உரிய சான்றுகளுடன் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களை

ஒப்படைக்க வேண்டி ஆணை பெறப்பட்டதாகவும், பின்னர் உரிய ஆவணங்களை ஒப்படைக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 பிறகு வாய்மொழியான தன்னுடைய விண்ணப்பம் ஏற்க இயலாது என்று கூறப்பட்டவுடன் மின்நுகர்வோர் மன்றம், சிவகங்கை அவர்களுக்கு புல எண் மாற்றம் செய்து விவசாய மின் இணைப்பு வழங்க மனு அளிக்கப்பட்டதாகவும், பல்வேறு காரணங்களை கூறி மனு நிராகரிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 2007இல் தன்னால் கேட்கப்பட்ட புல எண் மாற்றம் முறைப்படி நடைபெற்றிருந்தால் தனது முன்னுரிமைப்படி இலவச விவசாய மின் இணைப்பு, எந்த தடங்களும் இன்றி கிடைக்கப்பெற்றிருக்கும் எனவும், 2007இல் புல எண் மாற்றம் கேட்ட போது ஒரு வேளை நிராகரித்திருந்தால் கூட மீண்டும் புதியதாய் பதிவு செய்திருந்தால் பதினைந்து வருட முன்னுரிமையாவது கிடைக்கப்பெற்றிருக்கும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 புல எண் 21/5Bக்கு தனது தந்தை சின்னப்பன் என்ற மாணிக்கம் அவர்கள் பெயரில் 540/31.12.1990 இலவச மின்சாரம் வேண்டி பதியப்பட்டிருந்ததாகவும், 22.01.1999–இல் தந்தை இயற்கை எய்திவிட்டதாகவும், 2007–இல் இலவச மின்சாரம் பெற அறிவிப்புக் கடிதம் கொடுக்கப்பட்டதாகவும், தனது தந்தையின் முன்னுரிமையை தனது பெயருக்கு 2007இல் மாற்றம் செய்து 2010–இல் இலவச மின்சாரம் கிடைக்கப்பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 பூர்வீகமாக இரு கிணறுகள் உண்டு, தான் 160/05.02.2002இல் விண்ணப்பிக்கும் போது இரு கிணறுகளிலும் மின்சாரம் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 21/5Bயில் அமைந்த கிணறுக்கு 2010இல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் 60/1க்கு 2007இல் புல எண் மாற்றம் கேட்டு விண்ணப்பம் செய்யப்பட்டதாகவும், அரசு விதிகளுக்கு புறம்பாக எந்த தவறும் மனசாட்சிப்படி செய்யவில்லையெனவும், 160/05.02.2002 முன்னுரிமையில் இருபது ஆண்டுகாலம் காத்திருந்து தற்போது நிராகரிக்கப்படுவது மிக வேதனையாக உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 விவசாயியின் மன நிலையில் இருந்து 160/05.02.2002 என்ற பதிவுக்கு தற்போதாவது புல எண் 21/5B–இல் இருந்து 60/1க்கு மாற்றம் செய்து இலவச மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டு மனுதாரரான திரு. எம். வேதராஜசேகரன், கதவு எண் 5795 மேலரத வீதி, காளையார் கோவில் அவர்கள் 05.02.2002 அன்று தனக்கான கொடிக்காடு கடம்பூரணி குரூப் சர்வே எண் 21/5B இல் உள்ள கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு பெற செயற்பொறியாளர்/பகிர்மானம்/சிவகங்கை அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாகவும், பதிவு எண் 160/05.02.2002 எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 21.05.2007இல் மேற்படி புல எண் 21/5B க்கு பதிலாக தனக்கு சொந்தமான வேறொரு சர்வே எண்ணான 60/1க்கு மாற்றக்கோரி விண்ணப்பம் அளித்ததாகவும் தெரிவித்து தற்சமயம் புல எண் மாற்றம் செய்யப்படாமல் 21/5B யிலேயே விவசாய மின் இணைப்பு உள்ளதாகவும், மேலும் தனக்கு விவசாய மின் இணைப்பு பெறுவதற்கான 22.07.2020 நாளிட்ட தனக்கான அறிவிப்பு கடிதம் வந்த பின்பு தான் தெரிய வந்தது என தெரிவித்து உடன் சர்வே எண் 60/1க்கு தனது பதிவை மாற்றம் செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் கோரியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேல்முறையீட்டளார் 2002இல் விவசாய மின் இணைப்பு வேண்டி சிவகங்கை செயற்பொறியாளர்/பகிர்மானம்/சிவகங்கை அலுவலகத்தில் பதிவு செய்த சர்வே எண் 25/1B க்கு ஏற்கனவே எம்.வேதராஜசேகரனின் தந்தையான திரு.சின்னப்பம் என்ற மாணிக்கம் என்பவர் மேற்குறிப்பிடப்பட்ட அதே கொடிக்காடு கடம்பூரணி குரூப் சர்வே எண் 25/1B க்கு விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பம் பதிவு செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்படி திரு.சின்னப்பன் என்ற மாணிக்கம் என்பவர் இலவச விவசாய விண்ணப்ப பதிவிற்கு விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு அறிவிப்பு கடிதம் செயற்பொறியாளர்/பகிர்மானம்/சிவகங்கை அலுவலகத்தில் 09.02.2007–இல் வழங்கப்பட்டுள்ளதாகவும், திரு. சின்னப்பன் என்ற மாணிக்கம் அவர்கள்

22.01.1999–இல் இறந்துவிட்ட நிலையில், மேல்முறையீட்டாளரும் திரு. சின்னப்பன் என்ற மாணிக்கத்தின் வாரிசுதாரருமாகிய திரு. எம். வேதராஜசேகரன் தன் தந்தையின் பெயரில் இருந்த புல எண் 21/5B–ஐ பெயருக்கு மாற்றம் செய்யப்பட்ட வருவாய் ஆவணங்களுடன் விவசாய விண்ணப்பத்தினை பெயர் மாற்றம் கோரி 09.05.2007 அன்று செயற்பொறியாளர்/பகிர்மானம்/சிவகங்கை அலுவலகத்தில் பெறப்பட்டு 16.05.2007 அன்றே பெயர் மாற்றம் செய்யப்பட்ட உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் தயார் நிலை நீட்டிப்பு வழங்கப்பட்டு விவசாய மின் இணைப்பும் திரு. எம். வேதராஜசேகரன் அவர்களின் பெயருக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் (மின் இணைப்பு எண் 460–013–175), தனது தந்தையார் பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு பெயர் மாற்றமும், தயார் நிலை பதிவிற்கு கால நீட்டிப்பு விண்ணப்பமும் செயற்பொறியாளர்/பகிர்மானம்/சிவகங்கை அலுவலகத்தில் கொடுக்கப்பட்டு குறிப்பாக மேல்முறையீட்டாளரின் தந்தையார் பெயரிலிருந்து தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்த பிறகு 21.05.2007 அன்று மேல்முறையீட்டாளர் தான் பதிவு செய்த விவசாய விண்ணப்பத்தை (160/05.02.2002) புல எண் 21/5B–லிருந்து புல எண் 60/1–ற்கு மாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் அளித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் மின்சார வாரிய விதிகளுக்குட்பட்டு இருந்திருந்தால் விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 தலைமை பொறியார்/திட்டமிடல் அவர்களின் Lr No. SE /RE&I(D)/ EE/ RE/ A1/ F. Doc/D.986/11, Dt. 22.07.2011–இன் அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின் இணைப்பு தான் இருக்க வேண்டும் என்றும், மேலும் வேறு விண்ணப்பம் எதுவும் மின் இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் ஒரு உறுதிப்பத்திரம் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 வாரிய விதிகளின்படி ஒரே சர்வே எண்ணிற்கு ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு விவசாய மின் இணைப்பு மட்டும் தான் வழங்கப்படவேண்டும். மேலும் விவசாய மின்

இணைப்பு பெறுவதற்கு முன்பாகவே சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். மின் இணைப்பு பெற்ற பின்னர் விவசாய மின் இணைப்பு மட்டுமே இடமாற்றம் செய்ய முடியும். சர்வே எண்ணை இடமாற்றம் செய்ய இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 திரு எம். வேதராஜசேகரன் அவர்கள் விண்ணப்ப பதிவு எண் 160/05.02.2002 இலவச விவசாய பதிவிற்கு 22.07.2020 அன்று இலவச விவசாய தயார் நிலை பதிவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்த கடிதத்தில் இதற்கு முன்பு ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் சர்வே எண் 21/5B–இல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு பெற்றிருந்தால் இவ்வறிவிப்பு பொருந்தாது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 கொடிக்காடு கடம்பூரணி குரூப் சர்வே எண் 21/5B–இல் உள்ள கிணற்றிற்கு மின் பளு 5HP விவசாய மின் இணைப்பு கோரி திரு எம். வேதராஜசேகரன் அவர்கள் விண்ணப்ப பதிவு எண் 160/05.02.2002 இதன்படி பதிவு செய்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளரின் பெயரில் அதே சர்வே எண்ணில் உள்ள கிணற்றில் மின் இணைப்பு எண் 460–013–175, மின் பளு 5HP என்ற மின் இணைப்பு உபயோகத்தில் இருந்து வருவதாக அறியமுடிகிறது. ஒரு நுகர்வோருக்கு ஒரு புல எண்ணில் ஒன்றிற்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்பு வழங்க வழியில்லை என்பதை தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி27(13) மற்றும் 29(2) ஆகிய விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. Requisitions for Supply of Energy:*

*(13) With in door number or sub door number, an establishment or person will not be given more than one service connection.*

*"29. Service Lines:*

*(2) In agricultural connections where the consumer requires a separate service connection for utilizing energy for radios and other appliances including domestic lighting in the farmhouse, morethan one service connection in the same survey field number/sub divided survey field number will be permitted."*

6.10 எனவே மேற்கண்ட சரத்துகளின்படி மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான சர்வே எண் 21/5–B விவசாய மின் இணைப்பிற்கான பதிவை மேல்முறையீட்டாளர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து அதன் தொடர்ச்சியாக சர்வே எண் 21/5–Bல் விவசாய மின் இணைப்பு எண் 460–013–175/நாள் 16.06.2010 பெற்றுள்ளதாகவும், மின்

இணைப்பு பெற்ற பிறகு அதே சர்வே எண்ணிலிருந்து மற்றொரு சர்வே எண்ணிற்கு மாற்றம் கோருவது தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பு மற்றும் மின்சார வாரிய விதிகளுக்கு புறம்பானது என்பதால் தற்போது சர்வே எண் மாற்றம் வழங்க இயலாது எனவும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 05.02.2002–இல் தனது விவசாய நிலம், புல எண் 21/5B–இல் உள்ள கிணற்றிற்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து பதிவு எண் 160/05.02.2002 ஆக பதிவு செய்ததாகவும், 21.05.2007–இல் புல எண் 21/5B–லிருந்து 60/1–க்கு மாற்றம் வேண்டி விண்ணபித்ததாகவும், புல எண் மாற்றம் கிடைக்குமென நம்பியிருந்த நிலையில் 20.07.2020–இல் விவசாய மின் இணைப்பு பெற தயார் நிலை அறிவிப்புக் கடிதம் பெறப்பட்டதாகவும், அவ்வறிவிப்புக் கடிதத்தில் புல எண் மாற்றம் செய்யாமல் 21/5B என்றே இருந்ததாகவும், எனவே புல எண் மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்கக் கோரியுள்ளார்.

7.3 மேற்கண்ட இதே புல எண் 21/5B–இல் மேல்முறையீட்டாளரின் தந்தை பெயரில் பதிவு எண் 540/31.12.1990–ஆக பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும், 22.01.1999–இல் தந்தை இறந்த பிறகு 09.02.2007–இல் தயார் நிலை அறிவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டு 09.05.2007–இல் பெயர் மாற்ற விண்ணப்பம் பெற்று 16.05.2007–இல் விவசாய விண்ணபத்தை தந்தை பெயரிலிருந்து மேல்முறையீட்டாளர் பெயருக்கு மாற்றம் செய்து, தயார் நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு அனுமதி வழங்கி 16.06.2010–இல் மின்பளு 5HP–யுடன் விவசாய மின் இணைப்பு எண் 460–013–175 வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மின்சார விதித் தொகுப்பின் விதி 27(13) மற்றும் 29(2)–இன்படி ஒரு நுகர்வோருக்கு, ஒரு புல எண்ணில் ஒன்றிற்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்பு வழங்க இயலாதென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 16.05.2007–இல் தந்தையின் விவசாய விண்ணப்பத்தை மேல்முறையீட்டாளர் தன் பெயருக்கு மாற்றிய பிறகு 21.05.2007–இல் அதே புல எண் 21/5B–இல் தான் பதிவு செய்த 160/05.02.2002 விவசாய விண்ணப்பத்தை புல எண் 60/1–க்கு மாற்றக் கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் எதிர்மனுதாரரிடம் சமர்ப்பித்ததாக நகல்களை சமர்ப்பித்துள்ளார். ஆனால் அவை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான ஆதாரம் மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருமே சமர்ப்பிக்கவில்லை. மேலும், தனது தந்தை பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு (540/31.12.1990) 09.02.2007–இல் தயார் நிலை அறிவிப்புக் கடிதம் பெற்ற பிறகு 09.05.2007–இல் பெயர் மாற்ற விண்ணப்பம் சமர்ப்பித்து 16.05.2007–இல் பெயர் மாற்றம் செய்த பிறகு தனது விவசாய விண்ணப்பத்தில் புல எண் மாற்றம் கோரி (புல எண் 21/5B–லிருந்து 60/1–க்கு) 21.05.2007–இல் விண்ணப்பித்துள்ளார். அதாவது ஒரே புல எண்ணிற்கு இரு விவசாய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக் கூடாது என தெரிந்தே மேல்முறையீட்டாளர் புல எண் மாற்றம் கோரியுள்ளது அறிய முடிகிறது. அதாவது ஒரே புல எண் 21/5B–இல் பதிவு எண் 540/31.12.1990–ஆக மேல்முறையீட்டாளரின் தந்தை பெயரிலும், 160/05.02.2002–இல் மேல்முறையீட்டாளர் பெயரிலும் விவசாய விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது என அறிய முடிகிறது. ஆகையால், தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(13) மற்றும் 29(2)–இன்படி, மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் (பதிவு எண் 160/05.02.2002) மின் இணைப்புக்குரிய தகுதி இழந்ததாக கருதுகிறேன்.

7.5 மேற்கண்ட வாதங்களிலிருந்து மேல்முறையீட்டாளரின் தந்தை திரு.சின்னப்பன் (எ) மாணிக்கம் அவர்களின் பெயரில் புல எண்.21/5B-ல் உள்ள கிணற்றுக்கு விவசாய இலவச மின் இணைப்ப வேண்டிய விண்ணப்பம் **பதிவு எண்.540 / 31.12.1990 ல் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் அதே புல எண்.** 21/5B-ற்கு மேல்முறையீட்டாளரும் விண்ணப்பம் செய்வது கீழ்க்கண்ட விதிகளின் படி முரணானதாகும்.

*Tamil nadu Electricity Distribution code 2004*
*"**27. Requisitions for Supply of Energy:***
*XXXX XXXX XXXX*
*(13) Within door number or sub-door number, an establishment or person will not be given more than one service connection.*
*XXXX XXXX XXXX*

***29. Service Lines:***
*(2) In agricultural connections where the consumer requires a separate service connection for utilizing energy for radios and other appliances including domestic lighting in the farm house, more than one service connection in the same survey field number / sub divided survey field number will be permitted.”*

ஆக, அதே புல எண்.21/5பி-ற்கு 5.2.2002 அன்று விண்ணப்ப நிலையிலேயே அது மேற்கண்ட விதிகளின்படி பதிவுசெய்ய தகுதியற்றதாகும். எனவே ஒரு நுகர்வோருக்கு ஒரு புல எண்ணில் ஒன்றிற்கு மேற்பட்ட விவசாய இலவச மின் இணைப்பு வழங்க இயலாது என்கிற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக கருதுகிறேன். மேலும் 09.02.2007 அன்று புல எண்.21/5பி-க்கு தனது தந்தை பெயரிலான விண்ணப்பத்திற்கான தயார்நிலை அறிவிப்பு பெற்ற பின்னரே மேல்முறையீட்டாளர் தனது பெயரிலான மற்றோர் விண்ணப்பத்தில் (160/5.2.2002) புல எண் 21/5பி மாற்றம் செய்ய விண்ணப்ப நாள் 21.5.2007 வாயிலாக முயற்சி மேற்கொண்டுள்ளார் என்பதன் மூலம் மேல்முறையீட்டாளர் மாற்றுவழியில் இரண்டாவது இலவச விவசாய மின் இணைப்பு பெற முயற்சிசெய்துள்ளதாக கருதவேண்டியுள்ளது. இது அரசு வழங்கும் இலவச மின்சாரத்தை பெற காத்திருக்கும் ஏனைய விண்ணப்பதாரர்களை ஏமாற்றும் செயலாகவும் கருதுகிறேன். இத்தகைய சூழலில் விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவுஎண்.160/5.2.2002-ஐ புல எண்.21/5பி-லிருந்து புல எண் 60/1-க்கு மாற்றம் செய்து இலவச மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்கிறேன்.

**8.0 <u>முடிவுரை</u>:**

**8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு எண் 160/05.02.2002–ஐ புல எண் 21/5B–லிருந்து புல எண் 60/1–க்கு மாற்றம் செய்து இலவச மின் இணைப்பு வழங்கக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்கிறேன்.**

**8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 90/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்:
1. திரு. மா.வேதராஜசேகரன்,
த/பெ. மாணிக்கம்,
5795, மேலரதவீதி,
காளையார்கோவில்,
சிவகங்கை மாவட்டம் – 630 551.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம் /சிவகங்கை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கலெக்டர் வளாகம், சிவகங்கை – 630 562.

3. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம் /காளையார்கோவில்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், காளையார்கோவில் – 630 551.

4. உதவி பொறியாளர்/ பகிர்மானம் /காளையார்கோவில்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், காளையார்கோவில் – 630 551.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலகம், சிவகங்கை – **630 562.**

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144**, அண்ணாசாலை, சென்னை – **600 002.**

**7.** செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

**8.** உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**